**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**
**CC No. 188/2018**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw1/ Pw1 |
| Name | : Padma |
| Father/Husband's Name | : Pazhani |
| Village | : |
| Taluk | : Thirukachur |
| Calling | : |
| Age | : 50 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09.03.2026.

**Accused absent.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருக்கச்சூரில் வசித்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். கடந்த 9 வருடங்களுக்கு முன்பு, தேதி, மாதம் ஞாபகமில்லை, ஒரு நாள், இரவு 7.00 மணியளவில் எனது தம்பி அரசு என்கிற பாபிவிற்கு சிங்கபெருமாள் கோவிலில் இருக்கு தேசிய நெடுஞ்சாலையில் விபத்து ஏற்பட்டதாகவும், ஒரு கார் எனது தம்பியை இடித்ததாகவும், எனது தம்பியை செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சேர்த்திருப்பதாகவும் ஒரு நபர் எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார். நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது, மருத்துவர்கள் எனது தம்பிக்கு பின் தலையில் அடிப்பட்டு இருப்பதாக தகவல் சொன்னார்கள். மறுநாள் விடியற்காலையில் எனது தம்பி சிகிச்சை பலனின்றி இறந்ததாக மருத்துவர்கள் என்னிடம் சொன்னார்கள். நான் மறைமலைநகர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் **அதசா.ஆ1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

நான் தகவல் அறிந்து அரசு மருத்துவமனைக்கு சென்று எனது தம்பியை பார்த்தேன். விபத்து ஏற்படுத்தியது எந்த வாகனம் என்றும், யார் ஓட்டினார்கள் என்றும் எனக்கு தெரியாது. இந்த விபத்து சம்பந்தமாக காப்பீடு தொகை கேட்டு, வழக்கு தாக்கல்

செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன், தொகையை பெற்றுள்ளேன். இந்த காப்பீடு தொகைக்காக தான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.